**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், காங்கேயம்**

**முன்னிலை:– செல்வி.D. தேன்மொழி, பி.ஏ.,பி.எல்., எல்எல்.எம்.,**

குற்றவியல் நீதித்துறை நடுவர், காங்கேயம்

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12 ம் நாள் வியாழன்கிழமை

**Crl.MP.No. 90/2026**

**குற்ற எண். 509/2008, காங்கேயம் P.S**

பழனிச்சாமி,
த/பெ. தங்கமுத்துக்கவுண்டர்,
பாப்பினி,
பச்சாப்பளையம்,
காங்கேயம் தாலூக்கா,
திருப்பூர் மாவட்டம். ..மனுதாரர்/வாகன உரிமையாளர்

/எதிர்/

திரு. காவல் உதவி ஆய்வாளர் அவர்கள்,
காங்கேயம் காவல் நிலையம்,
குற்ற எண். 509/2008
பிரிவு. 12 of TNG Act

..எதிர்மனுதாரர்/புகார்தாரர்

இம்மனுவானது இறுதியாக 12.03.2026 ம் தேதியன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P. லிங்கசாமி, B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/புகார்தாரர் தரப்பில் அரசு உதவி குற்றத்துறை வழக்கறிஞர் அவர்கள் முன்னிலையாகியும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்

**உத்தரவு**

இந்த மனுவானது BNSS பிரிவு 497 ன் கீழ் வழக்குச் சொத்தான **TCE1011** என்ற பதிவு எண் கொண்ட இரு சக்கர வாகனத்தின் பதிவு சான்றை எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் ஒப்படைத்து அதை மனுதாரர் வசம் ஒப்படைக்குமாறு இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது

D THENMOZHI

Digitally signed by D THENMOZHI
Date: 2026.03.12 19:23:01 +0530

**2. மனுவின் சுருக்கம்**

மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட **TCE1011** என்ற எண்ணுள்ள காரின் பதிவு சான்று அசல் சமூக நீதிமன்றத்தில் உள்ளது. மேற்படி வாகனத்தின் பதிவு சான்று அசல் வாகனத்தின் பதிவு சான்றை புதிப்பிப்தற்கு, காப்பீடு செய்யவும் பதிவு சான்று அசல் தேவைப்படுகிறது. மேற்படி வழக்கில் நாளது வரை குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யாமல் வழக்கு முடிவடைந்து விட்டது. மேற்படி வழக்கில் மேல்முறையீடு எதுவும் நிலுவையில் இல்லை. வழக்கின் மேல்முறையீடு காலம் முடிவடைந்துவிட்டது. தற்போது வாகனத்தின் அசல் பதிவு சான்று நீதிமன்றத்தின் வசம் உள்ளது. மேற்படி வழக்கு முடிந்துவிட்டதால் அசல் பதிவு சான்றிதழை வழங்குமாறு மனு தாக்கல் செய்துள்ளார்.

**3. மனுதாரர் கூறியபடி இம்மனு அனுமதிக்கத்தக்கதா?**

இரு தரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்ததில் வழக்கு சொத்தான **TCE1011** என்ற பதிவு எண் கொண்ட இரு சக்கர வாகனத்தின் பதிவு சான்று மேற்படி குற்ற வழக்கில் காங்கேயம் காவல் துறையினரால் கைப்பற்றப்பட்டு இந்நீதிமன்றத்தின் வசம் உள்ளது. மேற்படி வாகனத்தின் பதிவு சான்றிதழ் மனுதாரர் பெயரில் உள்ளது. மேற்படி வாகனம் மனுதாரருக்கு சொந்தமானது ஆகும்.

3.1) மாண்புமிகு உச்ச நீதிமன்றம் **Sunderbhai Ambalal Vs State of Gujarat, reported in 2002 (10) SCC Page 283** என்னும் வழக்கில் நீதித்துறை நடுவர்கள் வழக்குச் சொத்துக்களை உரிமையாளர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் உரிமையாளர்களிடம் வழக்கு சொத்துக்களின் புகைப்படங்கள் மற்றும் பஞ்ச நாமாக்கள்

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.03.12 19:23:07 +0530

தயார் செய்து அவற்றை வழக்கு விசாரணைக்கு பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் கூறியுள்ளது.

3.2) மேற்படி முன்தீர்ப்பன்படியும், மேலும் இவ்வழக்கானது முடிவடைந்துவிட்டதால், வாகனத்தின் பதிவு சான்றிதழை அதன் உரிமையாளரான மனுதாரர் வசம் ஒப்படைக்கலாம் என இந்நீதிமன்றைம் தீர்வு காண்கிறது.

இறுதியாக, இம்மனுவானது அனுமதிக்கப்பட்டு வழக்கு சொத்தான **TCE1011** என்ற பதிவு எண் கொண்ட வாகனத்தின் பதிவு சான்றிதழை மனுதாரர் வசம் நிபந்தனைகளின்றி ஒப்படைக்க உத்தரவிடப்படுகிறது

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 12 நாள் திறந்த நீதிமன்றத்தில் வைத்து அவையறிய பகரப்பட்டது.

D THENMOZHI

Digitally signed by D THENMOZHI
Date: 2026.03.12 19:23:12 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்

காங்கேயம்.